செய்தி வெளியீடு எண் : 69 நாள் :25.11.2021

**தேனி மாவட்டம்**
**இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் கீழ்**
**விழிப்புணர்வு தெரு நாடக கலை நிகழ்ச்சி தொடக்க நிகழ்வினை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள்**
**பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில்**
**கொடியசைத்து துவக்கி வைத்தார்:-**

******

தேனி மாவட்டம், தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையத்தில் இன்று (25.11.2021) பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு தெரு நாடக கலை நிகழ்ச்சி தொடக்க நிகழ்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்து, தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்றுப் பரவல் சார்ந்த பொது முடக்க காலங்களில் அரசு பள்ளிகளில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளை சரி செய்திடும் வகையில் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தினை தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படுத்திட அறிவுறுத்திவுள்ளார்கள்.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் கீழ் 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களின் கற்றல் இடைவெளி ஈடு செய்திடும் வகையில், பள்ளி நேரங்களை தவிர்த்து தினந்தோறும் 1 முதல் 1.1/2 மணி நேரம் தன்னார்வலர்களின் பங்களிப்புடன் கற்றல் வாய்ப்பினை ஏற்படுத்திடவும், மேலும், இத்திட்டத்தின் கீழ் 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 12-ம் வகுப்பு முடித்தவர்களும் மற்றும் 6-ஆம் முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பட்டப்படிப்பு முடித்தவர்களும் தன்னார்வலர்களாக இணையதளத்தின் வாயிலாக பதிவு செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, தேனி மாவட்டத்திலுள்ள 1120 குடியிருப்பு பகுதிகளில் 443 கிராம குடியிருப்பு பகுதிகளில் இணையதளத்தின் வாயிலாக பெறப்பட்ட தன்னார்வலர்களின் விண்ணப்ப பதிவு, குறைவாக கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி, அக்குடியிருப்பு பகுதிகளுக்கு நேரடியாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் தலா 9 நபர்கள் கொண்ட 5 விழிப்புணர்வு தெரு நாடக கலைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்கலைக்குழுக்கள் மூலம் மாவட்டத்திலுள்ள 443 குடியிருப்பு பகுதிகளில் நாளொன்றுக்கு 20 நிகழ்ச்சிகள் வீதம் 35 நாட்களுக்கு தொடர்ந்து நடத்தி பொதுமக்களிடையே விழப்புணர்வு ஏற்படுத்திடவும், தன்னார்வலர் பதிவினை அதிகப்படுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மேலும், இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் கீழ் 2 தன்னார்வலர்களுக்கு ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, முதன்மைக் கல்வி அலுவலர் ச.செந்திவேல்முருகன், பள்ளிகல்வித்துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**